## பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் / on earth peace, good will toward men

Praise the Lord:

எனக்கென்று ஒரு பிரியம், உங்கள் ஒவ்வொருவருக்கும் உங்களுக்கென்று ஒரு பிரியம் என்று பல எண்ணங்கள் வாழ்க்கையிலே நம்மிடத்தில் இருந்தாலும்....நாம் அனைவருமே தேவன்மேல் பிரியம் உள்ளவர்களாக, இங்கு ஒன்றுகூடியிருக்கிறபடியினால், தேவனாகிய கிறிஸ்துவும் நம்மேல் பிரியம் வைத்து நம்மோடும் நம்மத்தியிலும் வாசம் செய்வதற்காக ஸ்தோத்தரிக்கிறேன். ஆமென்.

இந்த வருடத்தின் கடைசி மாதத்திலே கர்த்தர் கிருபையினாலே, ஜீவிக்கும் நாம் அனைவரும், இன்று கர்த்தருக்கு விசேஷித்த நன்றிபலி செலுத்தி அனைவரும் ஜெபித்து உற்சாகப்படுவோம்.

லூக்கா/Luke 2:14 (பக்கம்: 79)

**உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும்**, பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்.

Glory to God in the highest, and on earth peace, good will toward men. (KJV)

இந்த 3 காரியங்களும் கிறிஸ்து மூலமாக நிறைவேறியது.

யோவான்/John 17:4 (பக்கம் 153)

**பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்**; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்.

I have brought you glory on earth by finishing the work you gave me to do. (NIV)

கிறிஸ்துவினால் உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை உண்டானது

கொலோசெயர்/Colossians 1:19-20 (பக்கம் 275)

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் இயேசுகிறிஸ்து மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.

For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross.

கிறிஸ்து சிந்திய இரத்தத்தினாலே சமாதானம் உண்டானது. கிறிஸ்துவின் சமாதானத்தினாலே, தேவன் யாவரையும் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ள மனுஷர்மேல் பிரியமுண்டாயிற்று.

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்.

Glory to God in the highest, and on earth peace, good will toward men. (KJV)

கிறிஸ்து பிறந்தபோது தேவதூதர்கள் வெளிப்படுத்திய நற்செய்தி அப்படியே கிறிஸ்துவின் இவ்வுலக வாழ்வில் நிறைவேறியது.

இந்த நற்செய்தியை நாம் அறிந்து, ஏற்றுக்கொண்டு தேவனோடு ஒப்புரவாகி வாழக்கூடிய ஒரு பாக்கியத்தை தேவன் நமக்கு, அவருடைய கிருபையினாலே கொடுத்தார். ஆமென்.

இதை இன்னும் அறியாமலிருக்கிற நமது உற்றார் உறவினர் நண்பர்களுக்காக விசேஷமாக இன்றைய தினம் ஜெபத்தில் மன்றாடுங்கள்.

*நம்முடைய ஜெபம் விசுவாசத்தோடும் - விசுவாசம் கிரியையோடும் இருக்க தேவன் உதவி செய்வார். ஆமென்.*

தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாக....இருக்க வேண்டுதல் செய்கிறேன் (பிலி 1:10-11) என்று வசனம் சொல்கிறது.

நம்மிடமுள்ள நீதியின் குறைவுகளுக்காக வருத்தப்படாதீர்கள். அதற்காக கவலை கொண்டு சோர்வடைந்து இப்பொழுது இருக்கிற உற்சாகத்தையும் இழந்துவிடாதீர்கள்.

தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாக....இருக்க வேண்டுதல் செய்கிறேன் என்று நமக்காக வாக்குக்கடங்காத பெருமுச்சுகளோடு வேண்டுதல்செய்கிற ஆவியானவரோடு சேர்ந்து நாமும் ஜெபிப்போம்.

நம்முடைய நீதியின் குறைவுகளை சுட்டிக்காட்ட பலர் இவ்வுலகத்தில் இருக்கலாம். சாத்தான்கூட நமக்கு சுட்டிக் காட்டி நம்மைச் சோர்வடையச்செய்வான் என்று தேவசெய்திகள் பல கேட்டிருக்கிறேன்.
நீதியின் குறைவுகளை சுட்டிக்காட்ட பலர் உண்டு. ஒருவராலும் குறைவுகளை நிறைவாக்கமுடியாது. நம்மை நீதியின்கனிகளால் நிறைந்தவர்களாக ஆக்க வல்லவர் கிறிஸ்து ஒருவரே.
*எனவே குறைவுகளை நினைத்து…சோர்ந்துபோகாமல்,*
*குறைவுகளை நிறைவாக்கும் கிறிஸ்துவைநோக்கி, விண்ணப்பித்து, பெற்று, உற்சாகமடையுங்கள்.*

---

பிலிப்பியர்/Philippians 1:10-11 (பக்கம் 270)
தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாக….இருக்க வேண்டுதல் செய்கிறேன். (பிலி 1:10-11)
And this is my prayer: that your love may abound more and more in knowledge and depth of insight, 10 so that you may be able to discern what is best and may be pure and blameless for the day of Christ, 11 filled with the fruit of righteousness that comes through Jesus Christ—to the glory and praise of God. (Phil. 1:9-11)
*கிறிஸ்து தன் கிருபையினாலே நீதிமான்களாக்கிய நம்மை நீதியின் கனிகளால் நிச்சயம் நிறைப்பார். ஆமென்.*
யோவான்/John 14:13 (பக்கம் 149)
நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா **மகிமை**ப்படும்படியாக, அதைச் செய்வேன்.
And I will do whatever you ask in my name, so that the Father may be glorified in the Son.
*உலகம்-மனிதன்-சாத்தானை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு தேவனை நோக்கி கிறிஸ்துவின் நாமத்திலே கேட்டு மன்றாடுவோம். பிதா மகிமைப்படும்படியாக அதை நிச்சயம் நமக்கு இயேசுகிறிஸ்து அருளிச் செய்வார்.*
யோவான்/John 15:8 (பக்கம் 150)
நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா **மகிமை**ப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.
This is to my Father’s glory, that you bear much fruit, showing yourselves to be my disciples.
என்று சொல்கிற தேவன் நம்மோடு இருக்கும்போது நாம் ஏன் கவலைப்படவேண்டும்.??
மிகுந்த கனிகளை கொடுக்க முடியவில்லையே என கவலை கொள்ளாமல்,
பெலவீனமடையாமல்……..
என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். (பிலி. 4:19)
And my God will meet all your needs according to the riches of his glory in Christ Jesus.
என்ற வசனத்தின்படியே குறைகளை நிறைவாக்குகிற ஒரேஒருவர் இயேசுகிறிஸ்து என்பதையும் அவர் நம்மோடும் நம் மத்தியிலும் இருக்கிறார் என்று தொடர்ந்தும் விசுவாசித்து ஜெபிக்க உங்கள் இருதயங்களை கர்த்தருக்குள் திடப்படுத்துங்கள்.

2 கொரிந்தியர்/2 Corinthians 1:20 (பக்கம் 246)
**எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி**, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே.
For no matter how many promises God has made, they are “Yes” in Christ. And so through him the “Amen” is spoken by us to the glory of God.
யோவான்/John 14:13 (பக்கம் 149)
**நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ**, குமாரனில் பிதா **மகிமை**ப்படும்படியாக, அதைச் செய்வேன்.
And I will do whatever you ask in my name, so that the Father may be glorified in the Son.

*எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி,….*
*தேவனுடைய வாக்குத்தத்தங்களை வைத்து கிறிஸ்துவின்மூலமாக ஜெபிக்கும்போது,*
*தேவன் மகிமைப்படும்படியாக….கிறிஸ்து நமக்கு பதில் கொடுப்பார்.*

இந்த 2 வசனங்களையும் திருப்பி திருப்பி வாசித்து தியானியுங்கள். நீங்கள் கேட்டுக்கொள்கிற ஒவ்வொரு ஜெபத்திற்கும் (நாம் மகிமைப்படும்படியாக அல்ல) பிதா மகிமைப்படும்படியாக, கிறிஸ்து நமக்கு செய்து வருகிறார் என்பதை உணர்வீர்கள்.

*கனிகளைக் கொடுக்கிறவர்களாகவும்,*
*மேலும் கனிகளை கிறிஸ்துவிடம் கேட்கிறவர்களாகவும் வாஞ்சிப்போம*

அப்போஸ்தலர்/Acts 10:38 (பக்கம் 177)
நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; **தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே** அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட **யாவரையும்** குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.
how God anointed Jesus of Nazareth with the Holy Spirit and power, and how he went around doing good and healing all who were under the power of the devil, because God was with him.
ஜீவனைக் கொடுக்கவும் அதை பரிபூரணப்படுத்தவும் கிறிஸ்து சுற்றித்திரிந்தார் என வாசிக்கிறோம்.

தன்னோடு இருந்த தேவனோடு, தேவசித்தத்திற்காக கிறிஸ்து சுற்றித்திரிந்தார்.

ஆத்தும ஜீவனை உணராமல், தன் மாம்ச சித்தத்திற்காக உலக மக்கள் சுற்றித்திரிகிறார்கள்.

நம்மோடிருக்கிற கிறிஸ்துவோடு, அவர் சித்தத்திற்காக நாம் சுற்றித்திரிவோம். ஆமென்

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாக்கிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இன்று நம்மோடு இருக்கிறார். அவர் பிறந்த நாளை கொண்டாடும் இந்த மாதத்தில், அவர் நம் விருப்பங்களை நிறைவாக்குவார். இதற்கு தடையாக நம் வாழ்க்கையில் நமக்கு என்னன்ன குறைகள் இருக்கிறதோ அவைகள் எல்லாவற்றையும்....
நம் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி நம்முடைய குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் என்ற விசுவாசத்தோடு,
கிறிஸ்துமூலமாக தேவனிடத்தில் மன்றாட எழுந்து நிர்ப்போம்.

**Let us PRAY**

கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். (1கொரி 6:20)

சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென். (ரோம 11:36)

விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. (யாக்கோபு 2:22)

---